கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.258/2021 வா.சா.1 வஞ்சிமுத்து

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 27.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

12) நான் 18.11.2025 அன்று தாக்கல் செய்த கூடுதல் ஆவணங்கள் எதனை நிருபிக்க என்பதனை கூறும் விதமாக நான் கூடுதல் சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் நடந்ததாக சொல்லும் 05.08.2021 தேதிய சம்பவம் தொடர்பாக தான் நான் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தில் வாகனம் கொண்டு செல்லும் போது ஏற்பட்ட சம்பவம் என்று தான் நான் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

13) வா.சா.ஆ. 6 முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் , வா.சா.ஆ. 10 , வா.சா.ஆ. 11 வாக்குமூலங்கள் ஆகியவற்றில் 9 அடி தடத்தில் சென்ற போது தான் பிரச்சனை ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய தடபாத்திய ஆவணங்களின் படி என் தடத்தின் அளவு 13 லிங்க்ஸ் தான் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் 9 அடி தடத்திற்கு அதிகமாக பயன்படுத்தியதாக தான் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தில் இரு தரப்பிற்கும் கைகலப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர்கள் தான் அடித்தார்கள் நாங்கள் தடுக்க தான் செய்தோம். வா.சா.ஆ 6 முதல் தகவல் அறிக்கை விசாரணைக்கு பின்னர் Mistake of fact என போலீசாரால் முடிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக முடிக்கப்பட்டதாகும். அதற்கு எதிராக மனு தாக்கல் செய்துள்ளேன்.

14) மேற்படி சம்பவத்தில் பிரதிவாதி தரப்பில் கொடுக்கப்பட்ட புகாரின் பெயரில் என் மீதும் என் மனைவி மற்றும் மகன்கள் மீதும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எனக்கு 13 லிங்க்ஸ் தடத்திற்கு மட்டும் தான் உரிமை உள்ளது என்றும் அதற்கு அதிகமாக கோரும் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் எங்களுக்கு 13 லிங்க்ஸ் அகல தடத்தில் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யாமல் இருந்தால் போதுமானது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.சா.ஆ. 1 ல் தடத்தின் அகலத்தை நான் அதிகப்படுத்தி உபயோகித்து வருவதை காட்டியுள்ளார் என்றால் அது தவறாகும். வா.சா.ஆ. 14 மற்றும் வா.சா.ஆ. 15 ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தையது என்பதால் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி